
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 2 | செப்டம்பர் 1989 | இதழ் 9

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638002

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை
செவ்வாய் : மாலை 7-15—8-30...ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)
புதன் : மாலை 3-30—5-00.. சகோதரிகள் ஐக்கிய கூட்டம் (ஒருவாரம்விட்டு ஒருவாரம்)
வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
சனி : மாலை 7-00—9-00...மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


கேளுங்கள்! சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! 1

இயேசு இரட்சிக்கிறார்! 5

எருசலேம் பட்டணம். 9

புதிய ஏற்பாடு-பூரணப் பிரமாணம். 13

இயேசுவின் இரண்டாம் வருகை. 19

# THIRUMARAI AASAAN

Editor: E. Z. SELVANAYAGAM

Honorary Editor: J. C. CHOATE

**Published by Church of Christ**

**2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu, India**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol 2. September — 1989 Issue 9

**ஆசிரியவுரை**

## கேளுங்கள்! சிந்தியுங்கள்! செயல்படுங்கள்!

ஆவியானவர் சபைக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்று வெளிப்படுத்தின விசேஷம் பல இடங்களில் எச்சரித்துப் புத்தி சொல்லுகிறது (வெளி 2:7; 11, 16, 29. 3:6;13, 22; 13:9). என் அப்படிக் கூறுகிறது? ஏனெனில் வேதாகமத்தைப் படிக்கிற மக்கள் ஒன்றுபோல அதைப் புரிந்துகொண்டு, அதற்குக் கீழ்ப்படிவதில்லை. உதாரணத்துக்குச் சில: எசே 33:30, 31-ல் 'உனக்கு முன்பாக என் ஜனங்கள் போல் உட்கார்ந்து உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள். ஆனாலும் அவர்கள் அவைகளின்படி செய்கிறதில்லை. அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள் அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப் போகிறது" என்று அவர்கள் மாயத்தைச் சாடுகிறார். பெந்தெகோஸ்தே நாளில் அப்போஸ்தலன் பேதுருவின் உருக்கமான முதல் நற்செய்திப் பிரசங்கத்தைத் திரளான மக்கள் கேட்டுப் பிரமிப்பு அடைந்தனர். ஆனால் மூவாயிரம் பேர் மட்டுமே இருதயத்தில் குத்தப்பட்டு, தாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டு அறிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர் (அப் 2:5-12; 37, 41.) பெருமபான்மையோர் கேட்டதோடு சரி, செயல்படவில்லை.

இதைவிடக் கொடுமை ஸ்தேவானின் உரையைக் கேட்ட மக்கள் செய்த காரியம் அவர்கள் கீழ்ப்படியாதது மட்டுமல்ல, மூர்க்க மடைந்து, அவனைப்பார்த்துப் பல்லைக்கடித்துக் கல்லெறிந்து கொன்றேவிட்டார்கள் (அப் 7:54, 57, 60), அத்தேனே பட்டணத்தில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே உலக இரட்சகர் என்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையொன்றை நிகழ்த்தினார் பவுல். ஆனால் தாங்கள் மெத்தப் படித்த

வர்கள் என்ற மமதையால் சிலர் அவரை இகழ்ந்தனர். வேறு சிலர். நீ சொல்வதை இன்னொரு நாளைக்குக் கேட்போம் என்று ஈரங்கி வைத்தார்கள். ஒரு சிலர் மட்டுமே அவரைப் பற்றிக்கொண்டு விசுவாசிகளானார்கள் அப் 17:34.

ஆம், சகோதரர்களே, சூரிய வெளிச்சமும், உஷ்ணமும், அறுத்து வைக்கப்பட்டுள்ள சுடாத செங்கல்லின் மீதும் பனிக்கட்டி மீதும் ஒரே விதமாகப் பாய்ந்தாலும் அப் பொருட்களின் தன்மைகளில் வித்தியாசமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. செங்கல் இறுகுகிறது; பனிக்கட்டி உருகுகிறது. அதே போன்று சொல்லப்படுகிற வசனங்கள் ஒரே மாதிரியாக இருந்த போதிலும், வசனங்களைக் கேட்கிற உள்ளங்கள் வித்தியாசமாக இருக்கின்றன என்று இயேசு, தமது விதைக்கிறவன் உவமையிலே சொல்லுகிறார் (மத் 13:15-23; லூக் 8:12, 15, 18.) அவர் கேட்கிற மக்களின் இதயங்களை நான்கு வகையாகப் பிரிக்கிறார்.

**முதலாவது வகை:** எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்கள். பாலஸ்தீன நாட்டின் வயல் வெளிகளில் மக்கள் நடந்து செல்வதற்கு ஒற்றையடிப்பாதை இருக்கும். அதில் மக்கள் நடந்து மிதிப்பதால் இறுகிப்போயிருக்கும். விதைக்கும் போது அதன் மீது விழுகிற விதைகள் ஏர் உழவுக்குச் சிக்காமல் மேலேயே கிடக்கும். ஆகாயத்துப் பறவைகளின் கண்களில் அது சீக்கிரமாய்த் தென்படுவதால் அவைகள் அவைகளைப் பொறுக்கிச் சாப்பிட்டு விடும். ஆகையால் அது முளைப்பதற்கே வாய்ப்பில்லை. வளர்வது, கனி கொடுப்பது என்பது பற்றிய பேச்சுக்கே இடமில்லை. அதைப் போன்று இவர்களுடைய இதயங்களில் கர்த்தருடைய வார்த்தைகள் போய்ச் சேருவதில்லை. ஒரு காதில் கேட்டு மறு காதில் விட்டு விடுகின்றனர். மத்தேயு, இப்படிப்பட்ட மக்களின் நிலையை விளக்க ஏசாயா மற்றும் எசேக்கியேல் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை மேற்கோள் காட்டிக் கடிந்துகொள்ளுகிறார் (ஏசாயா 6:9, 10; எசே 12:2 )

**இரண்டாவது வகை:** ஆழமான வேர் இல்லாத செடியைப் போன்றவர்கள் (லூக் 8:13.) பாலஸ்தீன நாட்டில் சுண்ணாம்புப் பாறைகள் அதிகம். அதன் மேற்பகுதியில் மழை, காற்று ஆகியவைகளால் கொண்டு வரப்பட்ட சொற்ப மண்ணே படிந்திருக்கும். அவைகளின் மீது விழும் விதைகள் முளைத்து வேரூன்றிக் கனி கொடுக்கக் கூடிய அளவு மண் ஆழமாக இருக்காது. அதனால் அவைகள் சீக்கிரமாக வாடி உலர்ந்து போகும். அதைப் போன்று சிலர் வசனத்தை ஆர்வத்தோடு கேட்பார்கள். உற்சாகமாக ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், உறுதியாகப் பிடித்துக்கொள்ள முடியாமல் தடுமாறுவார்கள். சோதனைகள் வரும்போது தாக்குப்பிடிக்க முடியாமல் துவண்டு போவார்கள்.

லூக்கா இந்த சோதனை என்று குறிப்பிடுகிற இந்த நிலையை மத்தேயு "உபத்திரவங்கள்" என்று குறிப்பிடுகிறார். (மத் 13:21) ஆகவே சத்தியத்தை ஏற்றுக் கொண்டு அதில் நிலைத்திருப்பது என்பது

ஆழமான உறுதியான வேர்கள் உள்ள செடிகள் அல்லது மரங்களுக்குச் சமம். உபத்திரவங்கள், துன்பங்கள், சோதனைகள் என்று பலதரப்பட்ட எதிர்மறையான சூழல்கள், இகழ்ச்சிகள் இழப்புகள் விசுவாசிகளுக்கு ஏற்படும்போது ஆகியவைகளைத் தாங்கி நிற்கும் மனஉறுதி வேண்டும். அப்போஸ்தலன் பவுல் இதை 'அன்பில் வேரூன்றுதல்' என்று வர்ணிக்கிறார் (எபே 3:17) அவர் கொலோசேயருக்கு அறிவுரை கூறும்போது 'நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபடியே அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும் அவர் மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்ட படியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக' என்கிறார் (கொலே 2:6, 7.) மேற்கூறிய வசனங்கள் நமக்கு உணர்த்துகிற காரியம் தேவனுடைய வார்த்தைகளை நாம் படித்துத் தெரிந்து கொள்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் அதைத் தியானித்து ஏற்றுக்கொண்டு வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருக்கவேண்டும் என்பதாகும் (யாக் 1:22)

**மூன்றாவது வகை:** எதிர்த்துப் போராட முடியாத ஒரு நிலையைக் குறிக்கிறது (லூக் 8:14.) சில நிலங்கள் செழிப்புள்ளதாக இருக்கும். ஆனால் களைகள் நீக்கப்படாமலும், சரியாகப் பண்படுத்தப்படாமலும் இருக்கும்போதே விதைகள் விதைக்கப்பட்டுவிடும். விதை முளைத்து வளரும்போது கூடவே களைகளும் வளர்ந்து, பயிர்களை வளரவிடாமலும், வளர்ந்தாலும் கனி கொடுக்க முடியாமலும் இடைஞ்சல் உண்டாக்கும். அதுபோன்று சிலருடைய இதயங்களில் குடிகொண்டிருக்கும் பாவ இயல்புகள் கர்த்தருடைய வசனங்கள் கிரியை செய்ய முடியாதபடி நெருக்கிப் போடுகின்றன. அந்த தடங்கல்கள் மூன்று வகையானது என்று இயேசு இந்த உவமையில் குறிப்பிடுகிறார்.

**(அ) உலகக் கவலை:** (1 பேதுரு 5:7) ஐஸ்வரிய மயக்கம் (மத் 6:19) உலக உல்லாசம் (பிலி 3:19; 1 தீமோ 5:6, 2 தீமோ 3:4) 'மாமிசமும் மனதும் விரும்பினவைகளைச் செய்கிறவர்கள் என்றும்,' 'அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்கள்' என்றும் வேதாகமம் இப்படிப்பட்டவர்களை வர்ணிக்கிறது (எபே 2:1-3.) மெய்க் கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட இச்சைகளை வெறுத்து, இவ்விதமான இயல்புகளிலிருந்து தப்பி நடக்கவேண்டும் (1 யோவான் 2:16.) .

**நான்காவது வகை:** இதயத்தில், வசனத்தை ஏற்றுக் கொண்டு கனி கொடுக்கிற நிலைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது (லூக் 8:15 ) பாலஸ்தீனா நாட்டில் சமவெளிப் பகுதிகளும் உண்டு. அவைகளில் ஆண்டு முழுவதும் தருணத்துக் கேற்ற வேளாண்மைகள் செய்து கொண்டிருக்கிறபடியால் களைகள் நீக்கப்பட்டு பண்பட்டிருக்கும். அதைப் போன்று நல்ல இதயங்களில் சொல்லப்படுகிற சத்தியம் ஸ்திரமாக வேர் ஊன்றி எதிர்பார்க்கிற நல்ல பலனைக் கொடுக்கும். நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியில் உறுதி-

யாய் நின்று ஆத்மாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்துக்காகப் போராடி எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்கள் என்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குப் பாத்திரமாக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள் (பிலி 1:27.) என்ற பவுலின் அறிவுரையின் படியும் எபி 12:1 கூறுகிறபடி பொறுமைசாலிகளாகவும் இருக்கிற மக்கள் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.

முதலில் சொல்லப்பட்ட மூன்று இதயங்களைக் காட்டிலும் நான்காவதாகச் சொல்லப்பட்ட இதயம் எப்படி வித்தியாசப்படுகிறது என்று கவனியுங்கள். (அ) உண்மையும் உத்தமமுமான இதயம் ஏனோதானோவென்று கேட்கிற இதயத்தைவிட வித்தியாசமாயிருக்கிறது (ஆ) முதலில் ஆர்வத்தோடு கேட்டு சோதனைகளும், உபத்திரவங்களும் வரும்போது பின்வாங்கிப்போகிற இதயத்தை விட வித்தியாசமாக இருக்கிறது (இ) முட்கள்களைகள் ஆகிய உலகக் கவலைகளாலும் ஐஸ்வரியத்தின் மயக்கத்தினாலும் நெருக்கப்பட்டு கனிகொடுக்கமுடியாத நிலையைக் காட்டிலும் வித்தியாசமாக இருக்கிறது.

இந்த உவமை நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது?

(1) கிறிஸ்தவனாவதற்குத் தேவையான முதல் காரியம் விசுவாசம் (மாற்கு 16:16; யோவான் 7:24; அப் 2:38; அப் 8:37; 16:31.)

(2) மனம் திரும்பவேண்டும் அதாவது நம்முடைய பாவ நிலைக்காக மெய்மனஸ்தாபப்பட்டு அவ்வழிகளை வெறுத்து ஒதுக்கி ஒரு புதிய வாழ்க்கையைத் துவங்குவதற்கான தீர்மானத்துக்கு வரவேண்டும் (லூக் 15:17-30 a; 13:3; அப் 2:38; 3:19; 17:30.

(3) பின்னர் பாவங்கள் போகத் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும் (அப் 2:38; அப் 22:15; 1 பேது 3:21.) தவறான போதகங்களைக் கேட்டு மனதைக் கடினப்படுத்திக் கொள்ளுதல். சொல்லுகிறவனுடைய தகுதியை எடைபோட்டுக் கொண்டு தேவனுடைய வசனத்தின் கருத்தாழத்தை அசட்டை செய்தல், உலக உல்லாசத்தின் பிடியிலிருந்து விலகிக்கொள்ள மனமில்லாமல் தங்களுடைய தவறான போக்கையும், நிலையையும் கண்டு கொள்ளாமை, தங்கள் போலி பக்தியை அங்கீகரித்து ஆறுதல் கூறும் கள்ளப் போதகர்களைச் சார்ந்துகொண்டு சத்தியத்தைக் கேட்டும் கீழ்ப்படிய மனமில்லாத நிலை ஆகியவைகள் நம்முடைய ஆத்துமாவை நரகத்துக்கு இழுத்துச் செல்லும் என்பதை உணரவேண்டும்.

அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இந்த உவமையைப் பொருத்திப் பாருங்கள். கிறிஸ்தவர்கள் தீமையை வெறுத்து ஒதுக்கவேண்டும் (ரோமர் 12:9.) பாவம் என்பது ருசித்து மகிழ உதவும்

(இதன் தொடர்ச்சி 8-ஆம் பக்கம் பார்க்க)

# இயேசு இரட்சிக்கிறார்!

மனிதனை பாவத்திலிருந்து மீட்டு இரட்சிக்க இயேசு இவ்வுலகிற்கு வந்தார் என வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. 'அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்' என இயேசுவை ஈன்றெடுக்கவிருந்த மரியாளிடம் தேவதூதன் கூறினான். 'இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்' என தன்னைப் பற்றி இயேசு கிறிஸ்துவே கூறினார் (லூக்கா 19:10.) மீண்டுமாக அவர், 'தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்', 'உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார்' எனக் கூறினார் (யோவான் 3:16, 17.) அப்போஸ்தலன் பவுல், 1 தீமோத்தேயு 1:15-ல் 'பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமானது; அவர்களில் பிரதான பாவி நான்' என எழுதுகிறார்.

ஆம். இயேசு கிறிஸ்து வீழ்ந்து போனவர்களை இரட்சிக்க வந்தார்; பாவத்திலிருந்து மனிதர்களை விடுவிக்க வந்தார். பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் மனிதன், தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட நிலையில், இவ்வுலகிலோ மறு உலகிலோ, எவ்வித நம்பிக்கையும் இல்லாமல் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ள வழி எதுவுமின்றி தவிக்கிறான். அல்லது, தன்னை இரட்சிக்க எந்த ஒரு மனிதனின் உதவியையும் அவன் நாட முடிவதில்லை; கிறிஸ்து ஒருவரே அவனை இரட்சிக்கக் கூடும். ஏனெனில் அதற்காகவே அவர் தேவனிடமிருந்து இறங்கி இவ்வுலகிற்கு வந்தார். மனிதனுடைய பாவங்களுக்கு ஈடாக தனது இரத்தத்தை சிந்தினார்; அவனுக்கு இரட்சிப்பு அளிக்க தனது உயிரையே தந்தார். இவ்வித உயிர்த்தியாகம் நடைபெற்ற பின்னரும், இயேசுவை தேவனுடைய குமாரன் என ஏற்றுக்கொண்டு, தன்னை இரட்சிக்க அவர் வந்தார் என மனிதன் நம்பினால் மட்டுமே அவனுக்கு இரட்சிப்பு உண்டு. கிறிஸ்துவில் அவனுடைய நம்பிக்கையை நிரூபிக்க அவனுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என பிறரிடம் அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும். அதாவது, தேவனுடைய திட்டத்தின்படி ஒருவன் நடக்கும் போது, கிறிஸ்துவின் இரத்தத்துடன் ஐக்கியப்பட்டு, அதன் பலன்களை அனுபவிக்கிறான், அல்லது இரட்சிக்கப்படுகிறான்.

சில வேளைகளில், விசுவாசத்தின் இரட்சிப்பு தன்னிலேயே ஒரு சக்தி என்பதாக நாம் பேசுகிறோம். ஆனால் வேதாகமம் கூறுவது என்ன? தேவனின் போதனைகளின்படி நடக்க, கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய ஒருவனை வழி நடத்த வல்லமையுள்ள கிறிஸ்துவின் பேரிலுள்ள நம்பிக்கையே விசுவாசத்தின் இரட்சிப்பு எனக் கூறுகிறது. அதுவே விசுவாச இரட்சிப்பு. கிறிஸ்துவை மனதால் ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல, தீவிரமான கீழ்ப்படிதலையும் உண்டாக்கியது அது. கிறிஸ்துவை தேவனின் குமாரன் என வெறுமனே மனதில் நம்பிக்கொண்டு, அவருடைய போதனைகளை நிராகரித்தால் அது செத்துப்போன விசுவாசம் என வேதாகமம் வர்ணிக்கிறது. யாக்கோபு 2-ஆம் அதிகாரத்தைப் படியுங்கள். இயேசு கிறிஸ்துவே நம்மை இரட்சிக்கிறார் என்பதை மனதிலிருத்துங்கள். விசுவாசம் இரட்சிக்கிறது எனக் கூறுவது, ஒருவனை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தி, அவருடைய போதனைகளுக்கு கீழ்ப்படியச் செய்து' அதன் விளைவாக அவனுடைய பாவங்களிலிருந்து தேவன் அவனை விடுவித்து, இரட்சிப்பதையே குறிக்கும். இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் தேவையென ஒரு கட்டத்தில் பேதுரு குறிப்பிடுகிறார் (1 பேதுரு 3:21.) உலகின் எத்திசைகளிலும் போய் எல்லா மக்களுக்கும் நற்செய்தியை அறிவியுங்கள் என அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து கட்டளையிட்டார். 'விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்' (மார்க் 16:16) என்றும் அவர் கூறினார். ஆனால், ஞானஸ்நானம் ஒருவனை இரட்சிக்குமா? முழுக்கு ஞானஸ்நானம் அல்லது யோவான் 3:3-5-ல் கூறுவது போல 'மறுபடியும் பிறப்பது' மட்டுமே ஒருவனை இரட்சிக்காது. தண்ணீரில் முழுகி எழுவது அல்லது ஞானஸ்நானம் பெறுவது, தேவனில் நம்பிக்கை வைத்து அவருடைய கட்டளைகளின்படி நடப்பதை ஒட்டியே ஒருவனுடைய பாவ மன்னிப்புடன் கூடிய இரட்சிப்பு சாத்தியமானது என வேதாகமத்தில் இப்பகுதியை நீங்கள் படிக்கும்போது புரிந்துகொள்ள முடியும். ஞானஸ்நானத்தால் மட்டுமே இரட்சிப்படைய முடியும் என வேதாகமம் எந்த இடத்திலும் கூறவில்லை.

மேலும், பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேமில் கூடியிருந்த மக்களிடம், உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என பேதுரு கூறினார் (அப் 2:40.) மனந்திருந்துங்கள் அல்லது கெட்டுப்போவீர்கள் என அவர் காலத்திய மக்களிடம் இயேசுகிறிஸ்து கூறினார் (லூக் 13:3.) 'சத்தியம் விடுதலையாக்கும்' (யோவான் 8:32.) என்றும் அவர் கூறினார். இவ்வசனங்களை படித்து நாம் தெரிந்து கொள்ளுவது இரட்சிப்படைய கிறிஸ்துவின் உபதேசங்களை வாழ்க்கையில் கடைப்பிடிப்பது அவசியம் என்பதாகும்.

இதற்கு அர்த்தம் என்ன? இரட்சிப்படைய பல வழிகள் உண்டா? சடங்குகள் நம்மை இரட்சிக்குமா? அல்லது கிறிஸ்து நமது இரட்சகரா?

கிறிஸ்துவே நமது இரட்சகர் என்றால், நமது இரட்சிப்பின் தொடர்பாக வேறு பல காரியங்கள் கூறப்படுவது ஏன்? விடை மிக எளிது. இயேசு கிறிஸ்துவின் போதனைகளின்படி நடக்கும் அளவிற்கு அவரை நாம் முற்றிலுமாக விசுவாசிக்கும்போது நம்மை அவர் இரட்சிக்கிறார் என்ற உண்மையைத் தான் இன்ன பிற காரியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக, உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என பேதுரு பெந்தெகோஸ்தே நாளன்று கூடியிருந்த மக்களை நோக்கி கூறுகையில், கிறிஸ்துவுக்குப் புறம்பாக அம் மக்கள் தங்களைத் தாங்களே சுயமாக இரட்சிக்கும் வல்லமை படைத்தவராயிருந்தனர் என அவர் கூறவில்லை. மாறாக, தேவனைப் பற்றிய அவர்களின் ஞானத்தின் அடிப்படையிலும், அவர் அளிக்கும் இரட்சிப்பின் அவசியத்தை உணரவும், அவர்களைத் தட்டி எழுப்பி, செயல்பட்டு தேவனுக்குக் கீழ்ப்படிய அவர்களை உற்சாகப்படுத்தினார். அதேபோல, மனந்திரும்பு அல்லது கெட்டுப்போவாய் என இயேசு கூறியபோதும் அவரைச் சுற்றியுள்ள மக்கள் கெட்டுப்போகாதபடியும், அவர்மேல் வைத்த நம்பிக்கை, கீழ்ப்படிதல் இவற்றின் அடிப்படையில் அவர்களுடைய பாவங்களுக்காக அவர்கள் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பவே அவர்களை ஊக்கப்படுத்தினார். அத்தோடு, தேவனை விசுவாசித்து அவருடைய கட்டளைகளின்படி நடக்க சத்தியத்தினால் வழி நடத்தப்பட்டால் மட்டுமே அந்த சத்தியம் ஒருவனை இரட்சிக்கிறது. இறுதியாக, கிறிஸ்துவை பின்பற்றி, அவருடைய போதனைகளின் விளைவால் தேவபக்தியோடு வாழும் கிறிஸ்தவ வாழ்க்கையும் இரட்சிக்கிறது என நாம் கூறலாம்.

இரட்சிப்பு கிறிஸ்துவிலும் அவருடைய சபையிலும் உள்ளது என நாம் கூறுகிறோம். இரட்சிப்படைய சபையில் அங்கம் வகிப்பது அவசியம் என நாம் சொல்லும்போது, சபையே இரட்சிக்கிறது என நாம் போதிப்பதாக பலர் எண்ணுகின்றனர். ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறோம். சபை இரட்சிப்பைத் தராது; கிறிஸ்து மட்டுமே இரட்சகர். ஆனால் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்போது அவர் இரட்சிப்பளித்து தனது சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார். எனவே, ஒருவன் இரட்சிக்கப்பட்டிருந்தால், தேவனுடைய சபையில் அவன் அங்கம் வகிக்கிறான். ஏனெனில், இரட்சிக்கப்பட்டவர்களை கிறிஸ்து தானாகவே தமது சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார். ஆகவே, ஒருவன் தேவனுடைய சபையில் இல்லை என்றால் அவன் இரட்சிப்படைந்ததைக் குறித்து ஐயப்பாடு உண்டாகிறது. ஏனெனில் இரட்சிப்படைந்த ஒவ்வொருவரையும் அக்கணமே தேவன் தனது சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார்.

எனவே கிறிஸ்துவே நமது இரட்சகர்; அவர் ஒருவரே நமது இரட்சகர் என நாம் அறிகிறோம். அவரின்றி நாம் இரட்சிப்படையவே முடியாது. நம்முடன் வசிக்கும் ஒரு மனிதன் மூலமாக நாம் இரட்சிப்பு அடைய இயலாது. அல்லது நமது நற்செயல்களால் மட்டும் நாம்

இரட்சிப்பைப் பெற முடியாது. நமது இரட்சிப்பில் பல காரியங்கள் அடங்கும்; விசுவாசம், கீழ்ப்படிதல், மனந்திரும்புதல், ஜெபம், ஞான ஸ்நானம், கிறிஸ்தவ வாழ்க்கை, தேவனுடைய சபையில் அங்கம் வகிப்பது. ஆனால், இவையெல்லாம் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட செயல்பாடுகளேயாகும். கிறிஸ்துவுக்குள் நாம் இருக்கும் போது சகலவற்றையும் பெற்றவர்களாக இருக்கிறோம். ஆனால் அவரை புறக்கணிக்கும்போது நம்மிடம் ஒன்றுமில்லை நாம்வெறும் மாமிசப் பிண்டங்களாகவே காட்சி தருகிறோம்.

தமிழில்: S. S. ராஜன் மூலம்: J. C. சோட்

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

விளையாட்டுப் பொருள் அல்ல. விளக்கின் ஒளியில் மயங்கிச் சுற்றிச் சுற்றி வந்து இறுதியில் மாண்டு போகும் விட்டில் பூச்சியை நினைத்துக் கொள்ளுங்கள். பாவம் என்பது மடியில் வைத்துக் கொஞ்சுவதற்கு ஏற்ற பூனைக்குட்டி போன்ற மனதுக்கு சுகம் தரும் சாதுவான பிராணி அல்ல. கொஞ்சம் ஏமாந்தால் குரல்வளையைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து ஆத்துமாவை சேதப்படுத்தி பிசாசுக்கும் அவனுடைய ஆட்களுக்கும் ஆயத்தம் செய்து வைக்கப்பட்டிருக்கும் நரகத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும் கொடிய விலங்கு. ஆகவே ஒரு கிறிஸ்தவன் தீமையாகத் தோன்றும் எல்லாவற்றிற்கும் விலகியிருக்க வேண்டும் என்று எச்சரிக்கப்படுகிறான் (1 தெச 5:22) ஆகவே அது நம்மை மீறி என்ன செய்துவிடும்? கொஞ்சம் சுவைத்துவிட்டு பின்னர் விட்டுவிடலாம் என்ற எண்ணம் கூடவே கூடாது. கம்பளி போனால் போகட்டும் கையை விட்டால் போதும் என்று நீ கதறுவாய். அந்தோ பரிதாபம்! கரடி உன்னைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்வதால் ஆற்றோடு அடித்துச் செல்லப்பட்டு மரணமடைவாய். நெருப்போடு விளையாடவேண்டாம்.

இன்றே தேவ வார்த்தையைக் கேள்! ஆழ்ந்து சிந்தி! உடனே செயல்படு. இன்றே இரட்சண்ய நாள். இப்பொழுதே அனுக்கிரக காலம். உன் உயிர் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதும் கர்த்தர் மீண்டும் எப்போது வருவார்? என்பதும் அறியப்படாத இரகசியம் ஆகையால் தாமதியாதே.

E. Z. செல்வநாயகம்

# எருசலேம் பட்டணம்

எருசலேம் பட்டணம் யூத மார்க்கத்துக்கும் கிறிஸ்தவ மார்க்கத்துக்கும் புண்ணிய ஸ்தலமாக கருதப்படுகிறது. இப் பட்டணம் பாலஸ்தீன நாட்டின் தலைநகரம். இப்பட்டணம், யூதேயா மலைப் பகுதியின் நடுவில் இருக்கிறது. இதன் பரப்பளவு தென்வடலில் சுமார் 4½ மைல் (7 கி.மீ.), கிழ மேற்கில் 1½ மைல் (2.5 கி.மீ). எருசலேம் என்பதற்கு சமாதானத்தின் இருப்பிடம் என்று பொருள். நமது முற்பிதாவாகிய ஆபிரகாமின் நாட்களில் இப்பட்டணம் சாலேம் என்று அழைக்கப்பட்டு, மெல்கிசேதேக் என்பவரின் ஆட்சியின் கீழ் இருந்தது (ஆதி 14:18.) இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக் கொண்ட நாட்களில் இது எபேசு என்ற பெயரில் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது இதற்கு, தாவீதின் நகரம், சீயோன், (1 இராஜா 8:1), யூதாவின் நகரம், (2 நாளா 25:28), மகா இராஜாவின் நகரம், (சங் 48:2), பரிசுத்த நகரம் (நெகே 11:1) என்ற மறுபெயர்களும் உண்டு.

மத்தியதரைக் கடலுக்கு கிழக்கில் சுமார் 55 கி. மீ. தூரத்திலும், சவக்கடலுக்கு 22 கி. மீ. மேற்கிலும் அமைந்துள்ள இப் பிரசித்தி பெற்ற நகரம் சீயோன், அக்ரா, மோரியா, பெசத்தா ஆகிய நான்கு குன்றுகளின் மேல் கம்பீரமாக நின்றது. குறைந்த பட்சம் பதினேழு முறையாவது அந்நிய படையெடுப்பால் பாதிக்கப்பட்ட இந்நகரம், இரண்டுமுறை தரைமட்டமாக்கப்பட்டது. அநேகந்தரம் இதனுடைய மதிற்சுவர்கள் தகர்க்கப்பட்டன. இருப்பினும், உலகின் பல்வேறு நாடுகளில் காணப்படும் சிறந்த நகரங்களில் ஒன்றாக இன்றும் இருந்து வருவது இந்நகரத்தின் சிறப்பு அம்சம்! இப் பட்டணத்தின் தென்மேற்குப் பகுதி, சீயோன் மலை. இதன் உயரம் கடல் மட்டத்துக்கு மேல் 2,550, அடி. அதற்கு வடக்கில் அக்ரா குன்று. இவ்விரண்டு குன்றுகளின் நடுவில் ஒரு மதில் சுவரை எழுப்பி தாவீது அரசன் சீயோனில் அரண் அமைத்துக் கொண்டு வாழ்ந்தான். அக்ரா குன்றுக்கு கிழக்கில் விசுவாசிகளின் தந்தையாகிய ஆபிரகாம் தன் புதல்வன் ஈசாக்கை பலியிட அழைத்துச் சென்ற மோரியா மலை இருக்கிறது. இந்தக் குன்றின் மீது தான் கி. மு. 1,004 வாக்கில் சாலமோன் அரசன் தேவாலயத்தைக் கட்டினான். அக்ராவிலுள்ள மக்கள் இத் தேவாலயத்துக்கு தொழுகைக்கு வருவதற்கு வசதியாக இவ்விரு மலைப் பட்டணங்களுக்கு இடையில் இருந்த ஆழமான பள்ளத்தாக்கு தூர்க்கப்பட்டு சமன் செய்யப்பட்டது. சீயோன் மலைப் பட்டணம் வாழ் மக்கள், ஆலயத்துக்கு வருவதற்கு வசதியாக பாலம் அமைத்து, படிகள் அமைக்கப்பட்டிருந்தன. வடக்கில் பெசத்தா குன்று இருக்

கிறது. அதன் மதிற்சுவர்கள் மிகவும் பலமாகக்கட்டப்பட்டு ஆங்காங்கே காவற்கோபுரங்கள் எழுப்பப்பட்டிருந்தன. அதனுடைய சுற்றளவு சுமார் 7 கி மீ. என்று சொல்லப்படுகிறது.

எருசலேமிற்கு கிழக்கே யோசபாத் பள்ளத்தாக்கைத் தாண்டி, ஒரு ஓய்வு நாள் பயண தூரத்தில், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இளைப்பாறவும், ஜெபம் பண்ணவும், சென்ற இடமாகிய ஒலிவமலை இருக்கிறது (அப் 1:12.) இதன் சரிவில்தான் கெத்சமெனே தோட்டமும், பெத்பகே, பெத்தானியா கிராமங்களும் இருக்கின்றன (சகரி 14:4, மத் 24:3, மாற் 11:1, 14:3, லூக் 19:29; 23:39; யோவா 8:1.)

இப்பட்டணம் கிழக்கு, மேற்கு, தெற்கு திசைகளில் பள்ளத்தாக்குகளால் சூழப்பட்டிருக்கிறது. கிழக்கிலுள்ள யோசபாத் பள்ளத்தாக்கு நீண்ட நாட்களாகவே கல்லறையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. தெற்கிலுள்ள இன்னோம் பள்ளத்தாக்கில் இஸ்ரவேலர்கள் ஒரு காலத்தில் 'மோளேகு' எனும் விக்கிரகத்தைத் தொழுது சேவித்து, தங்களுடைய பிள்ளைகளைத் தீக்கடக்கப் பண்ணவும், பலியிடவும் செய்து வந்தனர். யோசியா எனும் அரசன் ஆட்சிக்கு வந்தபொழுது அவற்றையெல்லாம் அகற்றி யெகோவா தேவனிடத்திற்கு அவர்களைத் திரும்பி வரும்படி உற்சாகப்படுத்தி வெற்றி பெற்றான். பின்னர் அப்பள்ளத்தாக்கு, நகரத்துக் குப்பைக் கூளங்களைக் கொட்டுகிற ஸ்தலமாக மாற்றப்பட்டு அவற்றைச் சுட்டெரிக்க எப்போதும் அக்கினி எரிந்து கொண்டிருக்கும். அதனால் அது 'எரிநரகம்' என்று அழைக்கப்பட்டது. (மத் 5:22.) இதன் சரிவில்தான், குயவன் நிலம் என்றும் இயேசு கிறிஸ்து காட்டிக் கொடுக்கப்படுவதற்கு கூலியாக ஒதுக்கப்பட்ட முப்பது வெள்ளிக்காசைக் கொண்டு வாங்கப்பட்டபடியால் 'இரத்த நிலம்' என்றும் அழைக்கப்பட்ட இடம் இருக்கிறது (மத் 27:6-8).

இஸ்ரவேலர் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்ட பிறகும்கூட நீண்ட நாட்கள் இப்பட்டணம் மட்டும் இதன் பூர்வ குடிகளாகிய எபூசியர் வசமே இருந்தது. தாவீது, அரசுக் கட்டில் ஏறி சுமார் கி. மு. 1,049 வாக்கில் இப்பட்டணத்தைவென்று தனது தலைநகர் ஆக்கிக்கொண்டான். பின்னர் சாலமோனின் காலத்தில் கி. மு. 1,004-ல் இங்கே தேவாலயம் கட்டப்பட்டது. சாலமோனின் மைந்தனான ரெகொபெயாமின் காலத்தில் இஸ்ரவேல் சாம்ராஜ்யம் இரண்டாகப் பிளவுபட்டபோது, தென் இராஜ்ஜியமாகிய யூதாவிற்கு இது தலைநகர் ஆயிற்று. அதற்குப் பிறகு பெலிஸ்தியர்கள், அரபியர்கள், பாபிலோனியர் என்று பல நாட்டவர்களின் படையெடுப்புக்களாலும், யூதாவை ஆண்ட அரசர்களுடைய பலவீனமான ஆட்சி காரணமாகவும், இந்நகரத்தின் பொலிவு மங்கி வரலாயிற்று. கி. மு. 586-ல் பாபிலோனின் அரசன் நேபுகாத்நேச்சார் இப்பட்டணத்தை முற்றி-

லும் அழித்துப்போட்டு, யூதர்களை சிறைபிடித்துச் சென்றான். பின்னர், பாரசீக மன்னர்கள் பாபிலோனை மேற்கொண்டு கி. மு. 537 வாக்கில் யூதர்களை எருசலேமுக்கு திரும்பிப் போகவும் அதைப் புதுப்பிக்கவும் தேவாலயத்தைக் கட்டவும் உத்தரவு கொடுத்து, உதவியும் செய்தனர். எனினும் பணி முற்றிலும் முடிவடையவில்லை. சுமார் கி. மு. 444-ல் அகாஸ்வேரு அரசனிடம், பானபாத்திரக்காரனாக பணியாற்றிய நெகேமியாவின் தலைமையில் எருசலேமின் மதிற்சுவர்களை பழுது பார்த்து செப்பனிட்டனர்.

உலக அரசியல் அரங்கில், பாரசீகர்களுடைய கை தாழ்ந்து, கிரேக்கர்களின் கை ஓங்கினபடியால், யூதர்களுடைய நிலைமையிலும் மாறுதல்கள் நிகழ்ந்தன. கி. மு. 168-ல் கிரேக்க அரசன் அந்தியோகு எப்பானேஸ் (Antiochus Ephanes) யூதர்களை மிகவும் ஒடுக்கி தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தி, விக்கிரகங்களை வணங்கும்படி வற்புறுத்தினான். இதனால், யூதர்கள் வெகுண்டெழுந்து மக்கபேயர்கள், (Macabees) தலைமையில் ஒன்று திரண்டு போர்க்கொடி உயர்த்தி, வெற்றிகண்டனர். சிறிது நாட்களே இவர்கள் சுதந்திரமாக இருக்க முடிந்தது. கி. மு. 63-ல் ரோமர்கள் எருசலேம் மீது படையெடுத்து வந்து அந் நகரை தங்கள் வசமாக்கிக் கொண்டு, தேவாலயத்தின் பரிசுத்தத்தைக் குலைத்து, சில ஆண்டுகள் கொடுங்கோலாட்சி நடத்திவிட்டு, நாட்டை ஆளும் பொறுப்பை ஏரோது வம்சத்தாரிடம் ஒப்படைத்து விட்டனர். அவர்களில் மிகவும் கீர்த்தி வாய்ந்த பெரிய ஏரோது என்பவர், கி. மு. 43-ல் எருசலேமை அலங்கரித்து, அதன் மாளிகைகளையும், தேவாலயத்தையும் பழுதுபார்த்து, முந்தியவைகளை விட சிறப்பாக நிர்மாணித்தான். அதுபோக அந்தோனியா கோட்டையையும், அதேபோன்ற வேறு சில கோட்டைகளையும், ஒரு பெரிய அரங்கசாலையையும் கட்டினான். இக் காலகட்டத்தில் கர்த்தராகிய இயேசு பூமியிலே மானிட உருவெடுத்திருந்தார். அரசியல் சூழ்நிலை, அதிக கொந்தளிப்பின்றி ஒரு வகையாகப் போய்க்கொண்டிருந்தது. ஆயினும் யூதர்களுடைய சுதந்தர தாகம் தணிந்துவிட்டது என்று சொல்லிவிடமுடியாது.

சுமார் கி. பி. 66-ஆம் ஆண்டு வாக்கில் ரோமர்கள், தீத்து என்ற தளபதியின் தலைமையில் எருசலேமை முற்றுகையிட்டு, இலட்சக்கணக்கான யூதர்களைக் கொன்று, பல்லாயிரக்கணக்கானவர்களை சிறைப்படுத்தினர். இரண்டாம் முறையாக கி. பி. 70-ல் எருசலேம் நகரம் மண்மேடானது. இந்நிகழ்ச்சிக்குப் பிறகு சுமார் அரை நூற்றாண்டுக்கும் அதிகமாக எருசலேம் நகரம், வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்து ஒதுங்கி இருந்தது. கி. பி. 136 வாக்கில் ஹார்டியன் (Hardian) எனும் ரோம அரசன், எருசலேமை வென்று, தேவாலயம் இருந்த இடத்தில் ஜுபீடர் தேவதைக்கு ஒரு கோவிலை எழுப்பினான். பின்னர் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்ட ரோம சக்கரவர்த்தியான கான்ஸ்டாண்டின் (Constantine), அந்த விக்கிரகத்தையும், கோவிலையும்

தரைமட்டமாக்கிப் போட்டு இயேசுவை அடக்கம் செய்ததாக கருதப் படும் புனித கல்லறை (Holy Sepulchre) யண்டையில் ஒரு பெரிய கத்தோலிக்க கோவிலைக் கட்டி எழுப்பினான். அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஜஸ்டியனும் (Justinian) பல கத்தோலிக்கக் கோவில்களையும், ஆஸ்பத்திரிகளையும் கட்டினான். இவ்வாறாக, கி. பி. 6-ஆம் நூற்றாண்டுவரை, கத்தோலிக்க சமயத்தின் ஐந்து பெரும் கேந்திரங்களில், முக்கியமாகமானதாக எருசலேம் புகழுடன் திகழ்ந்தது.

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது. கி.பி.1917 வரை, சிலுவைப் போர் நடந்த சில ஆண்டுகள் தவிர, பல்வேறு நாட்டு முகம்மதியர்களின் கைவசம் எருசலேம் சிக்குண்டது. அவர்கள், தற்போது உள்ள பிரசித்திபெற்ற ஓமர் மசூதி (Mosque of Omar) என்னும் முகம்மதியர் கோவிலை சாலமோனின் தேவாலயம் இருந்த இடத்தில் எழுப்பியுள்ளார்கள். இம்மசூதி, ஆசியக் கட்டிடக் கலைக்கு ஓர் சிறந்த மாதிரியாக விளங்குகிறது. இக்கட்டிடம், எண்கோணமாக, பக்கத்துக்கு 66 அடி என்று கட்டப்பட்டு, மத்தியில் 170 அடி உயரமுள்ள கோபுரம் உள்ளதாக, எருசலேம் நகரத்துக்கே தனி சிறப்பைத் தரும் வகையில் அமைந்துள்ளதாக சொல்லப்படுகிறது.

இறுதியாக, கி. பி. 1917-ல், இதை பிரிட்டிஷார் வென்று, கிறிஸ்தவர்களுக்கும், யூதர்களுக்கும் ஆதரவான அரசாங்கம் அமைத்தனர். தற்போது அங்கே கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும் கணிசமான பகுதியும், யூதர்கள் பெரும்பான்மையோராயும் வாழ்ந்து வருகின்றனர்.

## வெளிப்படுத்தின விசேஷம் கூறும்
## ஏழு பாக்கியவான்கள்

1. இத் தீர்க்க தரிசன வசனங்களை வாசிக்கிறவன்' கேட்கிறவன் கைக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள் 1:3
2. கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் 14:13
3. விழிப்போடு கர்த்தருடைய, வருகைக்காக காத்திருக்கிறவன் பாக்கியவான் 16:15
4. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் 19:19
5. முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவான் 20:6
6. இந்த புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் 22:7
7. ..........அவருடைய கற்பனையின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் 22:14.

# புதிய ஏற்பாடு-பூரணப்பிரமாணம்.

**எனக்கு அருமையான நண்பர்களே! தாய்க்குலமே!**

தலைப்பைப் பார்த்தவுடனே நான் ஏதோ பழைய ஏற்பாட்டுக்கும், யெகோவா தேவனுக்கும் விரோதி என்று முத்திரைகுத்தி விடாதீர்கள். 'எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்' என்று வேதம் கூறுவதை நினைத்துக்கொண்டு மேலே படித்துச் சிந்தியுங்கள்' (1 தெச 5:21.) தர்க்கம் செய்வதும், குறை கூறுவதும் அடியேனுடைய நோக்கமல்ல. நான் அடைந்த தெளிவை உங்களோடு பகிர்ந்து கொள்ளுகிறேன். அவ்வளவு தான். நன்றி; தொடர்ந்து படியுங்கள்.

2 தீமோ 2:15-ல் 'நீ வெட்கப்படாத ஊழியக்காரனும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனும், உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு' என்று அறிவுரை கூறுகிறார் அப்போஸ்தலன் பவுல். ஏனெனில் வெவ்வேறு கால கட்டங்களில் தேவன் தமது ஆலோசனைகளை பல்வேறு முறைகளில் வெளிப்படுத்தி யிருக்கிறார் (எபி 1:1-2.) அவைகளை உற்று நோக்கிக் கவனமாய்ப் பகுத்துப் பார்க்காத காரணத்தால், தற்காலத்தில் கிறிஸ்தவ மார்க்கத்தில் பல்வேறு விதமான கொள்கைக் குழப்பங்கள் தொடர்ந்து பெருகி, இயேசு துக்கத்தோடும், கண்ணீரோடும் ஜெபித்த ஒருமைப்பாட்டு ஜெபம் அர்த்தமற்றதாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. தயவுசெய்து யோவான் 17-ஆம் அதிகாரத்தை-குறிப்பாக 11, 20, 21 ஆகிய வசனங்களை வாசித்துத் தியானியுங்கள்.

உதாரணமாக, சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நோவா என்ற சான்றோன் காலத்தில் மனிதரிடையே பாவங்கள் தொடர்ந்து பெருகி வந்தன. அது தேவனுக்கு வருத்தத்தை உண்டுபண்ணியது. ஆகையால் உலகத்தை அழித்துவிட தேவன் தீர்மானித்தார். அதே நேரத்தில் தேவ பக்தியுள்ள நோவாவையும் அவருடைய குடும்பத்தாரையும் அவ்வழிவிலிருந்து காப்பாற்ற நினைத்து நோவாவுக்கு ஒரு பெரிய கப்பலைக் (பேழையை) கட்டும்படி உத்திரவிட்டார். சொன்னதோடு நில்லாமல் அதற்குரிய அளவுகளைக் கொடுத்து "கொப்பேரு' என்னும் ஒரு மரத்தைக் கொண்டு அதைச் செய்யும்படி கட்டளையிட்டார் ஆதி 6:1-22.

இன்னும் இதுபோன்ற எண்ணற்ற சம்பவங்களை நாம் வேதாகமம் முழுவதும் பார்க்கலாம். யாத் 12-ஆம் அதிகாரத்தில் பஸ்காவைப் பற்றியும்' அது எப்படிக் கொண்டாடப்பட வேண்டும், ஏன் கொண்டாடப்படவேண்டும்? என்றெல்லாம் விபரமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. மேலும் எண்ணாகமம் என்னும் நூலில் மிருக பலிகள் செலுத்தப்

பட்டதையும், அதன் நோக்கத்தையும், அவசியத்தையும் வாசிக்கிறோம்: எண் 28:1-6. இந்தக் கட்டளைகளெல்லாம் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கிற உன்னையும் என்னையும் கட்டுப்படுத்துமா? கட்டுப்படுத்தாது என்பதை சாதாரண அறிவுள்ள எவரும் ஒப்புக்கொள்வர்.

அப்படியெனில் அவைகள் எதற்காக பரிசுத்த வேதாகமத்தில் எழுதிவைக்கப்பட்டிருக்கிறது? தேவன் தமக்குப் பிரியமான மக்களுடன் எவ்வாறு தொடர்பு கொண்டார் என்பதையும், அம்மக்கள் தேவனுடைய ஆலோசனைகளுக்குக் கீழ்படிந்து நடந்ததின் மூலமாக அவர்கள் பெற்ற ஆசீர்வாதம் என்ன என்பதையும் நானும் நீங்களும் தெரிந்து கொள்வதால் நன்மையுண்டு என்று விளங்கிக் கொள்வதற்காக அவைகள் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன (ரோமர் 15:4) இதன் அடிப்படையில் பழைய ஏற்பாடு தேவனுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கை என்று நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம் (உபா 5:1, 2, 3, 4, 5, 6; நெக 9:13, 14; எசே 20:10,12; 1 ராஜா 8:9; ரோமர் 2:14; கலா 1:13, 14.) அது எவ்வளவு காலம் நீடிக்கவேண்டும் என்பதைக் குறித்தும், அது முடிவதற்கான சூழ்நிலைகளைப் பற்றியும் வேதாகமம் நமக்குச் சொல்லாமல் இல்லை. நியாயப்பிரமாணம் கிறிஸ்து வரும் வரையிலும் இருக்கும்படி கொடுக்கப்பட்ட ஒரு இடைக்காலச் சட்டம் என்று கலாத்தியத் திருச்சபைக்கு எழுதும்போது அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார் (கலா 3:19, 16, 21, 25.) அதேபோல் கொலோசேயருக்கு எழுதும்போது அவைகளைக் கிறிஸ்து, தனது சிலுவை மரணத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டு வந்ததாகக் கூறுகிறார். கொலோ 2:14.15; எபி 9:15; ரோமர் 10:4. ஒரு வகையில் பார்த்தால் முதலாம் உடன்படிக்கை ஒரு தேசியப் பிரமாணம் என்று தோன்றுகிறது. இதன் சட்டதிட்டங்கள், பாலைவனப் பயணத்தின் போது, ஓரேப் என்றும் சீனாய் என்றும் அழைக்கப்படுகிற ஒரு மலையின் அடிவாரத்தில், மோசே தலைமையில் இஸ்ரவேல் நாடு என்ற பெயருடன் மலர்ந்த ஒரு புதிய நாட்டின் அரசியல் சாசனமாகத் திகழ்கிறது என்றால் மிகையாகாது.

இந்த முதலாம் உடன்படிக்கையை உண்டாக்குவதற்கு முன்னரே கூட தேவன் தம்முடைய படைப்பின் சிகரமாகிய மனிதர்களோடு எவ்வாறு தொடர்பு கொண்டிருந்தார் என்று வேதாகமம் நமக்குத் தெரிவிக்கிறது. உலகத் தோற்றத்திலிருந்து நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்ட காலம் வரையுள்ள 2500 ஆண்டு வரலாற்றில், எழுதப்பட்ட பிரமாணங்கள் இல்லையென்றாலும் தேவன் குடும்பத்தலைவர்கள் வழியாக தன்னுடைய சித்தத்தை அவ்வப்பொழுது மக்களுக்குத் தெரிவித்துக் கொண்டு வந்தார். அதைத் 'தந்தை வழி ஆட்சிமுறை' என்று குறிப்பிடலாம். அதைப் பற்றி ஆதியாகாமத்தில் சில குறிப்புகள் மட்டுமே நமக்குத் தெரியவருகிறது. மற்றபடி பழைய ஏற்பாடு முழுவதும் தேவன் மோசே மூலமாக இஸ்ரவேல் மக்களோடு

செய்துகொண்ட முதலாம் உடன்படிக்கை பற்றியே அதிகமாய்ச் சொல்லுகிறது. அந்தச் சட்டம் இயேசுகிறிஸ்து உலகத்துக்கு வந்து பாடுபட்டு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தவரை நீடித்திருந்தது (எபி9:16, 17.)

இதனை அடுத்து புதிய ஏற்பாடு அமுலுக்கு வருகிறது. அது தேவனுக்கும் அனைத்து மனித குலத்துக்கும் இடையே ஏற்படுத்தப் பட்ட உடன்படிக்கை (யோவான் 1:17.) இரண்டாம் உடன்படிக்கையாகிய புதிய உடன்படிக்கையைக் கொண்டு வருவதற்கான காரணம், அவசியம் ஆகியவைகளை எபிரேயர் நிருபத்தில் வாசிக்கிறோம் (எபி7;13; 10:9.). பழைய ஏற்பாட்டில் உள்ள தேவனுடைய கட்டளைகளுக்கும், புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள பிரமாணங்களுக்கும் வித்தியாசம் உண்டு. புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டின் தொடர்ச்சி அல்ல. உபா 5:6-21; லேவி 5:1-13 எண் 28:1-11 ஆகிய பகுதிகளில் காணப் படுகிற பத்துக் கட்டளைகளும், அதன் தொடர்பான மற்ற சட்ட திட்டங்களும், மிருகபலிகளும், தகன பலிகளும் புதிய ஏற்பாட்டின் (உடன்படிக்கையின்) கீழ் வாழ்கிற நமக்குத் தேவையில்லாத, பொருந்-தாத சடங்கு முறைகளாகக் காணப்படுகின்றன. அதே போன்று கிறிஸ்தவ மார்க்கம் யூத மார்க்கத்தின் தழுவலும் அல்ல. பழைய ஏற்பாட்டுப் பலி செலுத்தும் முறை, பலதாரத் திருமண முறை, விருத்த சேதனம், தசமபாகம் போன்ற பல காரியங்கள் புதிய ஏற்பாட் டில் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது அல்லது முற்றிலும் புதியவைகள் புகுத்தப்பட்டுள்ளன. (மலைப் பிரசங்கத்தையும், இயேசுவின் இதர போதனைகளையும் கவனியுங்கள்).

எரே 31:31-34-ல் கூறப்பட்டுள்ள புதிய உடன்படிக்கை கிறிஸ் துவின் சிலுவை மரணத்திற்குப் பிறகு தான் அமுலுக்கு வந்தது. சிலர் நினைப்பதைப் போன்று அவருடைய மரணத்திற்கு முன்பு அல்ல (எபி 9:15-17.) இயேசு இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் பழைய ஏற்பாடே அமுலில் இருந்தது. அவர் நியாயப்பிரமாணத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப் பட்டிருந்தார் (கலா 4:4, 5.) அவருடைய மரணத்திற்குப் பிறகு பத்து கட்டளைகள் உள்பட சகல சட்டதிட்டங்களும் செல்லுபடியாகற் போயிற்று.

நாம் அப்படிச் சொன்னால் ஐயையோ என்னங்க பத்து கட்டளை கள் கடவுளின் திருக்கரங்களால் (விரலால்) எழுதப்பட்டவைகள் ஆயிற்றே. அது எப்படி ஒழியும்? ஒழிந்து போனதெல்லாம் மோசே கொடுத்த நியாயப் பிரமாணம் தான் என்று வாதிடுவர். ரோமர் 10:4-ல் கிறிஸ்து நியாயப்பிரமாணதின் முடிவாயிருக்கிறார் என்று கூறுகிறார். நியாயப்பிரமாணம் ஒன்று தான். தேவன் கொடுத்தது வேறு. மோசே கொடுத்தது வேறு அல்ல என்பதற்கு அநேக வசனச்-சான்றுகள் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் உண்டு.

பதங்கள் மாற்றி மாற்றி உபயோகிக்கப் பட்டிருக்கிறது. பத்துக் கட்டளையை தெய்வீகப்பிரமாணம் என்றும் மோசே கொடுத்ததை சடங்காசாரப் பிரமாணம் என்றும் மனிதன் பிரித்துக்கொண்டானே-யன்றி வேதாகமத்தில் இருப்பது ஒரே பிரமாணம் தான்-

உதாரணத்துக்கு லூக் 2:22-24 வரை உள்ள வசனப்பகுதியைக் கவனித்துப் படியுங்கள். 22-ஆம் வசனத்தில் மோசேயின் பிரமாணம் என்றும் 23, 24-ஆம் வசனத்தில் கர்த்தருடைய பிரமாணம் என்னும் குறிப்பிட்டு இரண்டும் ஒன்றே என்பதைத் தெளிவுபடுத்துகிறது. மேலும் இயேசுவின் சுத்திகரிப்பை கூட வேதம் கர்த்தருடைய பிரமாணம் என்றே கூறுகிறது. ஆகவே மோசேயின் பிரமாணம் என்பது சடங்காச்சாரப்பிரமாணம் என்கிறவர்களுடைய வாதமும் அடிபட்டுப் போகிறது. மேலும், மோசேயைக் கொண்டு கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய நியாயப்பிரமாணம் என்று 2 நாளா 34:13-ம் கர்த்தருடைய நியாயப் பிரமாணம் என்று 26-ஆம் வசனமும் 2 நாளா 31:3-ஆம் வசனமும் குறிப்பிடுகிறதைக் கவனியுங்கள். அதில் பத்து கட்டளைகளைப் பற்றிய பிரஸ்தாபம் ஒன்றுமில்லை. இருப்பினும் அவைகளைக் கர்த்தருடைய பிரமாணம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது.

எஸ்றா 7-ஆம் அதிகாரத்தின் 6-ஆம் வசனம் எஸ்றா மோசேயின் நியாயப்பிரமாணத்தில் தேறின வேதபாரகன் என்றும், 12-ஆம் வசனம் தேவனுடைய நியாயப் பிரமாணத்தைப் போதிக்கிற உத்தம வேத-பாரகன் என்றும் வர்ணிக்கிறது. இந்த வசனமும் கூட மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் தேவனுடைய நியாயப் பிரமாணத்தையும் வேறுபடுத்தவில்லை. அதேபோன்று நெகே 8:1-ஐயும் 8:8-ஐயும் கூட வாசியுங்கள்.

புதிய ஏற்பாடும் இவைகளைப் பற்றி மௌனமாக இருக்கவில்லை. மாற்கு 7:10-ல் 'உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக ......என்று மோசே சொல்லியிருக்கிறாரே' என்று கூறுகிறது. இக் கட்டளை தேவனால் கொடுக்கப்பட்டது என்று சொல்லப்படுகிற பத்து கட்டளைகளில் ஐந்தாம் கட்டளை 'மோசே சொல்லியிருக்கிறார்' என்று கர்த்தர் கூறும்போது, கர்த்தர் கொடுத்ததும், மோசே கொடுத்ததும், எல்லாமே ஒரே நியாயப்பிரமாணத்தின் பகுதிகளே என்று விளங்குகிற தல்லவா? 2 கொரி 3:7-15. வரை உள்ள வசனப் பகுதியில் ஒழிந்து போன பிரமாணங்களில், எழுத்துகளினால் எழுதப்பட்டு கற்களினால் பதிந்திருந்த பத்து கட்டளைகளும் அடங்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே பத்துக் கட்டளையும் சேர்ந்த நியாயப்பிரமாணத்தைத் தான் இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்தின் மூலம் ஒழித்துப் போட்டார் என்று அப்போஸ்தலன் பவுல் வேறு ஒரு இடத்தில் கூறுகிறார் (கொலோ 2:14,15.) ஆகவே சத்திய வேதத்தை அவமாக்கிப் பின்னுக்குத் தள்ளிவிட்டு தங்களுடைய விருப்பத்தையும்,

அபிப்பிராயத்தையும் திணிக்க முயற்சிக்கும் கள்ளப் போதகர்களுடைய சூழ்ச்சிக்கு நாம் பலியாகி விடக்கூடாது.

பத்து கட்டளைகள் ஒழிந்து போயிற்று என்று சொல்வதினால், இனிக் கட்டுப்பாடு இல்லாமல் பாவங்கள் பெருகும் என்று கவலைப்படாதீர்கள். ஏற்கனவே இருந்த சட்ட திட்டங்களை விட சிறந்த பிரமாணங்கள் கிறிஸ்து மூலமாய் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (யோவான் 1:17.)

| கட்டளைகள் | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|---|
| 1. என்னையன்றி வேறே தேவர்கள் வேண்டாம் | யாத் 20:3 | மத் 4:10; அப் 17:24-28 1 கொரி 8:5-6; வெளி 22:9 |
| 2. விக்கிரக ஆராதனை கூடாது | யாத் 20:4; | அப் 14:15; 17:29; ரோமர் 1:20-25 1 கொரி 8:4-6: 10:7 |
| 3. கர்த்தருடைய நாமத்தை வீணில் வழங்க வேண்டாம் | யாத் 20:7 | மத் 5:34; 12:36; எபே 4:29; கொலோ 3:8, யாக் 5:12 |
| 4. ஒய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரி | யாத் 20:8 | அப் 2:1, 42, 20:7; 1 கொரி 16:1, 2 |
| 5. தாயையும் தகப்பனையும் கனம் பண்ணு | யாத் 20:12 | கொலே 3:20; எபே 6:13 |
| 6. கொலை செய்யா திருப்பாயாக | யாத் 20:13 | மத் 5:21, 22, 1 யோவான் 3:15; 1 பேதுரு 4:15 |
| 7. விபசாரம் செய்யா திருப்பாயாக | யாத் 20:14 | மத் 5:27,28; 19:18, 1 கொரி 6:9; கலா 5:19; வெளி 21:8; |
| 8. களவு செய்யா திருப்பாயாக | யாத் 20:15 | எபே 4:28; 1 கொரி 6:10; |
| 9. பொய் சாட்சி சொல்லா திருப்பாயாக | யாத் 20:16 | கொலோ 3:9; எபே 4:25; 22:15 |
| 10. இச்சியாதிருப்பாயாக | யாத் 20:17 | லூக் 12:15; 1 கொரி 5:11; எபே 5:3; கொலே 3:9 |

ஆகவே கிறிஸ்துவின் பிரமாணமாகிய புதிய ஏற்பாடு பூரண பிரமாணமாகும். அது ஜீவனுக்கும், தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் உள்ளடக்கியது (2பேது 1:3.) அதில் நம்முடைய வாழ்க்கை

யின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தேவையான ஆலோசனைகளும், அறிவுரைகளும் உண்டு. அதனால் தான் இயேசு மறுரூபமான சமயத்தில் மோசேயையும் (நியாயப் பிரமாணத்தையும்) எலியாவையும் (தீர்க்க தரிசனங்களையும்) விடுத்து 'இவர் என் நேசகுமாரன், இவருக்குச் செவி கொடுங்கள்' என்று சொல்லப்பட்டது. மத் 17:5.

நம்முடைய சமயத்துக்கும், சௌகரியத்துக்கும் தக்கவாறு பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் மாற்றி மாற்றிப் பயன் படுத்திக்கொண்டு கிறிஸ்து மூலமாய்ப் பெற்றிருக்கிற இரட்சிப்பை நாம் அசட்டை செய்யக்கூடாது. ரோமர் 7:1-4-ல் உள்ள வசனங்களைக் கவனமாய்ப் படியுங்கள். எப்படி ஒரு பெண் இரண்டு பேருக்கு ஒரே சமயத்தில் மனைவியாயிருப்பது அவளுடைய கற்புடமைக்கு ஒவ்வாதோ அதேபோன்று ஒரு மனிதன் பழைய ஏற்பாட்டின் சட்ட திட்டங்களுக்கும் (மோசேயின் பிரமாணம்) புதிய ஏற்பாட்டு சட்ட திட்டங்களுக்கும் (கிறிஸ்துவின் பிரமாணம்) ஒரே சமயத்தில் கீழ்ப் படிந்து வாழ்வது ஆவிக்குரிய விபச்சாரமாகும்.

நண்பனே, சகோதரியே! நீங்கள் பெரோயா பட்டணத்தாரைப் போல 'காரியங்கள் இப்படி இருக்கிறதா? என்று தினந்தோறும் வேத வசனங்களை ஆராய்ந்து பார்ப்பீர்களா?'(அப் 17:11) காலம் சமீபித்து விட்டது. இன்னும் எதுவரைக்கும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்? 1 ராஜா 18:21.)

E. Z. செல்வநாயகம்

## வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழு மிகவும் சிறப்பு இடம் பெற்றிருக்கிறது.

ஏழு சபைகள் அதி 1-3
ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள் அதி 4:11
ஏழு விளக்குத் தண்டுகள் 1:12,20
ஏழு நட்சத்திரங்கள் 1:16,20
ஏழு தேவதூதர்கள் 1:20
ஏழு ஆவிகள் 1:4
ஏழு கொம்புகளும், ஏழு கண்களும் உள்ள ஆட்டுக்குட்டி 5:9
ஏழு விளக்குகள் 4:5
ஏழு இடி முழக்கங்கள் 10:3,4
ஏழு தலைகளும், ஏழு கிரீடங்களுமுள்ள ஒரு வலுசர்ப்பம் 12:3
ஏழு தலைகளுள்ள சிறுத்தை போன்ற ஓர் மிருகம் 13:1
ஏழு தலைகளுள்ள சிவப்பு நிற மிருகம் 13:3,7
ஏழு மலைகள் 17:9
ஏழு இராஜாக்கள் 17:10

# இயேசுவின் இரண்டாம் வருகை.

நான் சிறுவனாயிருந்த காலம் முதற்கொண்டே இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றிய ஹேஸ்யங்கள் கிறிஸ்தவ உலகத்தில் ஒரு பரபரப்புச் செய்தியாக இருந்து வந்திருக்கிறது. கிறிஸ்து வேதாகமத்தின் மையமாக இருக்கிறார் என்பது உண்மை. அவர் வருகிறார் என்று ஆதியாகமம் முதல் மல்கியா வரையிலும், அவர் பூமியில் இருக்கிறார் என்று மத்தேயு முதல் அப்போஸ்தலர் நடபடிகள் 1:11 வரையிலும், அவர் மீண்டும் வருவார் என்று அப் 1:11 முதல் வெளிப்படுத்தின விசேஷம் 22:20 வரை கூறுகிறது என்று சுருக்கிக் கூறமுடியும்.

இயேசு வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர் மீண்டும் வருவார் என்று அப்போஸ்தலர்களுக்கு உறுதியளிக்கப்பட்டது. அது பரிசுத்த ஆவியின் துணைகொண்டு எழுதப்பட்ட கடைசி அத்தியாயம் வரை அந்த வாக்குத் தத்தம் பல இடங்களில் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டிருக்கிறது.

I. **அவர் வருகிறார் என்பது உறுதி.** *யோவான் 14:1-3; அப் 1:9-11; வெளி 22:20.*

II. **அது தேவன் ஒருவருக்கு மட்டுமே தெரியும்.** மத் *24:35,36* இப்படி வேதம் தெளிவாகவும் திட்டமாகவும் கூறினாலும் இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றிச் சிலர் தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டும், தேதிகளை அறிவித்துக்கொண்டும் ஒரு சிறிது காலம் பெரிய ஆட்கள் என்ற பிரம்மையை உண்டுபண்ணிப் 'பந்தா' பண்ணிக் கொண்டு, பின்னர் அவைகள் நடைபெறாத போது மூக்குடைந்து தலைமறைவாகி விடுவர். மத் *24:37-42.* வசனப்பகுதி கூறுகிறது என்ன? நோவாவின் காலத்தில் நடந்ததைப் போலவே மக்கள் பெண் கொண்டும், கொடுத்தும், புசித்தும், குடித்தும் வழக்கம்போல் நடந்து கொண்டிருப்பார்கள். ஆனால் விசுவாசிகளே, ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினாலே விழித்திருங்கள் என்று கூறுகிறது.

III. **அவர் எவ்விதமாய் வருவார்?**

*(அ) அவர் தானே நேரடியாக வருவார் 1 தெச 4:16, 17.*

*(ஆ) அவர் எப்படி எடுத்துக்கொள்ளப்பட்டாரோ அப்படியே வருவார் அப் 1:11.*

*அதாவது அவர் மேகங்களினூடே எடுத்துக் கொள்ளப்பட்டார். அதே போன்று மேகங்களினூடே வருவார்.*

*(இ) அவர் பார்க்கக்கூடிய மாதிரி வருவார் வெளி 1:7.*

அனைவருடைய கண்களும் காணும் சன்மார்க்கரும், துன்மார்க்கரும் காண்பார்கள். அவரைக் குத்தினவர்களும், துன்மார்க்கரும் அழுது புலம்புவார்கள்.

(ஈ) அவர் திடீரென்று வருவார் 1 தெச 5:2, 3.

(உ) அவர் வல்லமையோடும், மகிமையோடும் வருவார். மத் 24:30

## IV. அவர் எதற்காக மீண்டும் வருகிறார்?

(அ) இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கிறதற்காக அல்ல.

அவருடைய இராஜ்ஜியம் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டாயிற்று. தானி 2:44-ல் தானியேலுக்குத் தரிசனமானபடி பூமியிலே அரசாளுகிற ஒரு பெரிய வல்லரசின் காலத்தில் இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே போல இயேசு கிறிஸ்துவும் 'காலம் சமீபித்து விட்டது' பரலோக இராஜ்ஜியம் சமீபித்து விட்டது, மனந் திரும்புங்கள். சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்று கூறினார் மாற் 1:15. இயேசு மரணம் அடையும் முன்னதாக யோவான் ஞானஸ்நானகனும், இயேசுவும், பனிரண்டு அப்போஸ்தலர்களும், எழுபது தெரிந்து கொள்ளப்பட்ட சீடர்களும் இராஜ்ஜியம் சமீபித்து விட்டது என்றே பிரசங்கித்தனர். மேலும் 'இங்கே நிற்கிறவர்களில் சிலபேர் மரிப்பதற்கு முன்பாக இராஜ்ஜியம் வரும்' என்றார்கள் மாற்கு 9:1...... இன்னும் இராஜ்ஜியம் வரவில்லை என்று கூறுவது உண்மையென்றால் அங்கே நின்றவர்களில் சிலர் இன்னும் மரிக்காமல் இருக்கவேண்டுமே. இரண்டாயிரம் ஆண்டு ஒரு மனிதன் வாழ்ந்துகொண்டு இருக்கிறான் என்று நம்புவது எவ்வளவு புத்தியீனம் என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள் இராஜ்ஜியம் வல்லமையோடு வரும்; அந்த வல்லமை பரிசுத்த ஆவியானவர் வரும்போது வரும். (அப் 1:8.) அதேபோல பரிசுத்த ஆவியானவர் வந்து அப்போஸ்தலர்களை ஆட்கொண்டதினால் அவர்கள் பிழையில்லாமல் அந்நிய மொழிகளைப் பேசி தேவனுடைய மகத்துவங்களை மக்களுக்கு அறிவித்தார்கள் (அப் 2:4.) அவர்கள் பேசினவைகளை, அற்புத அடையாளங்கள் உறுதி செய்தன (மாற்கு 16:20.) ஆகவே இராஜ்ஜியம் கர்த்தர் உயிர்த்தெழுந்த பிறகு வந்த முதலாம் பெந்தேகோஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்டாயிற்று (அப் 2:1-47.) அது முதற்கொண்டு இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டாயிற்று என்ற உண்மையின் அடிப்படையில் வசனங்கள் அமைந்திருப்பதைக் கவனியுங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல், தானும் கொலோசே பட்டணத்தில் உள்ள பரிசுத்தவான்கள் அனைவரும் இருளின் அந்தகாரத்தினின்று விடுவிக்கப்பட்டு, குமாரனுடைய அன்பின் இராஜ்ஜியத்துக்குள் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லுகிறார் (கொலோ 1:13) இராஜ்ஜியம் இல்லாமல் இருந்திருந்தால் அதற்குள் கொண்டுவருவது எப்படி

சாத்தியமாகும்? ஆகவே இந்த வசனம் நமக்குக் கூறுகிற உண்மை என்னவெனில் இராஜ்ஜியம் ஏற்கனவே ஸ்தாபிதம் ஆகிவிட்டது என்பதே.

யோவான் தான் இராஜ்ஜியத்துக்குள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார் (வெளி 1:9.) ஆகவே சுமார் 1950 ஆண்டுகளுக்கு முன்பாகவே இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டு விட்டபடியால் அவர் மீண்டும் வருவது இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதற்கு அல்ல.

**2. தாவீதின் சிங்காசனத்தில் உட்காருவதற்கு அல்ல.**

அவர் உயிர்த்தெழுந்தது அதற்குத்தான் (அப் 2:29-32.) சுமார் கி. பி. 33-ல் பேதுரு தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கும் மகிமையான சிங்காசனத்தில் உட்காருவதற்கு ஏறிப் போனார் என்று கூறுகிறார் (அப் 2:33.) தேவன் அவரை ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் (அப் 2:36.) கிறிஸ்துவுக்கு இப்பொழுது வானத்திலும், பூமியிலும், சகல அதிகாரங்களும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அவர் இப்பொழுது தமது இராஜ்ஜியத்தின் மீது அரசாண்டு கொண்டு இருக்கிறார். அப்படியிருக்க கிறிஸ்து இப்பொழுது இராஜாவாக இல்லை, இனிமேல் இராஜாவாக வருவார் என்பது வேடிக்கையாக இல்லையா? தயவுசெய்து கீழ்வரும் வசனங்களை வாசித்துப் பாருங்கள்-

(அ) அவர் மகிமை பொருந்தினவராய் தம்முடைய சிங்கசனத்தின் மேல் வீற்றிருந்து ஆளுகை செய்தார் சகரி 6:13.

(ஆ) அவர் இப்பொழுது சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார் அப் 2:30; கொலோ 3:1. ஆகவே அவர் இப்பொழுது சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்.

(அ) அவர் தம்முடைய சிங்காசனத்தின் மேல் ஆசாரியராயும் இருப்பார் (சகரி 6:3.)

(ஆ) அவர் இப்பொழுது ஆசாரியராயிருக்கிறார் (எபி 4;14.)

(இ) ஆகையால் அவர் இப்பொழுது அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்.

அ. அவர் இராஜாவாக அரசாளுவார் எரே 23:5.

ஆ. அவர் இப்பொழுது ஆளுகை செய்து கொண்டிருக்கிறார் 1 கொரி 15:25.

இ. அகையால் அவர் இராஜாவாயிருக்கிறார்.

**3. பாலஸ்தீனநாட்டை மீட்டு இஸ்ரவேலருக்குத் தருவதற்கு அல்ல.**

பாலஸ்தீன நாட்டை யூதர்களுக்குக் கொடுப்பேன் என்று வாக்குறுதி கொடுத்தார் என்பது உண்மைதான். ஆனால் அதை அவர்களுக்கு ஏற்கனவே கொடுத்து விட்டார். 'இந்தப் பிரகாரமாய் கர்த்தர் இஸ்ரவேலருக்குக் கொடுப்பேன் என்று அவர்களுடைய பிதாக்

களுக்கு ஆணையிட்ட தேசத்தையெல்லாம் கொடுத்தார். அவர்கள் அவைகளைச் சுதந்தரித்துக்கொண்டு அவைகளில் குடியிருந்தார்கள்.',
யோசுவா 21:43.

மேலே சொன்ன வசனத்தின்படி யெகோவா இஸ்ரவேலரின் மூதாதையர்களுக்கு வாக்குறுதி கொடுத்த பிரகாரம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தேசத்தையெல்லாம் கொடுத்துவிட்டார். அவர்களும் அவைகளைச் சுதந்தரித்துக்கொண்டு அவைகளில் குடியிருந்தார்கள். அப்படியிருக்க இனிமேல் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நாடோ அல்லது அதன்பகுதியோ ஒன்றுமில்லை.

**4. அவர் மீண்டும் வருவது யூதர்களை மனந்திரும்புங்கள் என்று மன்றாடுவதற்கு அல்ல.**

''இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள்''.
2 கொரி 6:2

மரணத்துக்குப் பிறகு மனந்திரும்புதல் கிடையாது. யூதர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்றால் அவர்களும் மற்றவர்களைப் போலவே சுவிசேஷத்துக்குக் கீழ்படிந்து தங்கள் பாவங்கள் போக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். 'சுவிசேஷமே இரட்சிப்புக்குத் தேவபெலனாயிருக்கிறது.' (ரோமர் 1;16)

''கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படி ஒரேதரம் பலியிடப்பட்டு தமக்காக காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். (எபி: 9:28)

முதன்முறை, உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படி தேவாட்டுக்குட்டியாக வந்தார். அனைத்து மக்களின் பாவங்களுக்காக மரித்து அவர்களை மீட்டு இரட்சிக்க வந்தார். இரண்டாம் முறை வரும்போது பாவ நிவர்த்தியைப் பற்றியோ, பிரயாச்சித்தத்தைப் பற்றியோ எந்தப் பேச்சும் இருக்காது. இரண்டாம் முறை அவருடைய வருகைக்காக விழிப்புடன் காத்துக்கொண்டிருக்கிறவர்களை அழைத்துப் போக வருகிறார்.

'தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்' என்று தேவனுடைய நிலையை விளக்குகிறார் பவுல். (அப் 10:34, 35)

யூதர்களுக்கென்று இனி தனிச்சலுகை கிடையாது. யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை. இரட்சிப்பின் திட்டம் யூதர்கள் உட்பட எல்லா நாட்டவருக்கும் ஒரே மாதிரிதான்; வித்தியாசமே இல்லை.

**5. ஆயிரம் வருடம் அரசாட்சி செய்வதற்கு அல்ல.**

இப்போதும் இயேசு அரசர்தான். 1 கொரி 15:25, 26ல் எல்லா சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படும் ''கடைசிச்சத்துரு மரணம்" என்று கூறுகிறது. இன்னும் மரணம் ஜெயிக்கப்படவில்லை. எப்படியென்றால் இன்னும் மக்கள் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். கடைசிச் சத்துருவாகிய மரணம் ஒழிக்கப்படும் வரையில் கிறிஸ்துஆட்சி செய்ய வேண்டும். அப்படியானால் வெளிப்படுத்தின விசேஷம் 20-ஆம் அதிகாரத்தின் பொருள் என்ன என்று சிலர் கேட்கத் துடிக்கிறார்கள்.

வெளிப்படுத்தின விசேஷத்தின் செய்திகளில் பெரும்பான்மையானவைகள் உருவகச் செய்திகள். ஒரு பொருளைப்பற்றி வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள இதர வசனங்களோடு இந்த உருவகச் செய்திகள் ஒத்து வராவிட்டால் அதன் கருத்தைப் பற்றிச் சிந்தித்துக் குழம்பிப் போகக் கூடாது. வெளிப்படுத்தின விசேஷம் 20ஆம் அதிகாரம் தவிர வேதாகமம் முழுவதிலும் வேறு எங்கும் ஆயிர வருட அரசாட்சியைப் பற்றிப் பார்க்க முடியாது: ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் 19ஆம் அதிகாரம் வரையில் ஆயிர வருட ஆட்சியைப்பற்றிய பிரஸ்தாபமே கிடையாது. இயேசு சொன்னார், 'என்னுடைய இராஜ்ஜியம் இந்த உலகத்துக்கு உரியதல்ல' (யோவான் 18:36) வேறு ஒரு இடத்தில் இவரை இராஜாவாக்கி விட வேண்டும் என்று மக்கள் முயற்சிக்கிறார்கள் என்று தெரிந்தவுடன் மறைந்து விட்டார். (யோவான் 6:15) நிலைமை இவ்வாறு இருக்க, உருவகச் செய்திகளை அதிகமாக உள்ளடக்கிய ஒரு நூலில் உள்ள ஒரு அதிகாரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து தேவனுடைய இதர வசனங்களின் கருத்தைப் புறக்கணிக்கக் கூடாது. 1 கொரி 15:25, 26 ஆகிய வசனங்களின்படி அவர் இப்பொழுது அரசாண்டு கொண்டு இருக்கிறார். அப்படியானால் நிச்சயமாகச் சொல்ல முடியாத, எப்பொழுதோ வரப்போகும் காலத்தில் ஆயிரம் வருஷம் ஆட்சி செய்யப் போகிறார் என்பது வாதத்துக்குப் பொருந்தவில்லை. மேலும் ரோமருக்கு எழுதின நிருபத்தின் காலத்தில் இயேசு அரசாட்சி செய்தார் என்பது எவ்வளவு உண்மையோ (ரோமர் 5:12,13) அதே அளவு இப்பொழுது அவர் அரசாண்டு கொண்டிருக்கிறார் என்பதும் உண்மை. அப்படி அவர் அரசாளவில்லை என்றால் புறஜாதிகள் இரட்சிக்கப்படுவதற்கான வாய்ப்பும் நம்பிக்கையும் உண்டு. (அப் 15:13-17) என்பது பொருளற்றது.

மேலும், கிறிஸ்துவைப் பரலோகத்திலிருந்தும் பரம சிங்காசனத்திலிருந்தும் கீழே இறக்கி, பூமிக்குரிய ஒரு அரியாசனத்தில் உட்கார வைக்கும் முயற்சி அவருக்கு மகிமை சேர்ப்பதாக இல்லை· மாறாக அவருடைய மகிமையைக் குறைக்கும் முயற்சியே.

''எல்லாத் துரைத்தனத்திற்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும் கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்

பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத் தக்கதாக,

அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து'' (எபே 1:20, 21) என்கிற வசனங்களில் அவருடைய உயர்வான நிலைமையை நாம் காண முடிகிறது.

**மேற் சொன்ன காரியங்களுக்கெல்லாம் அவர் வரவில்லை என்றால், பின் எதற்காக வருகிறார்?**

அவர் நல்லோரையும் தீயோரையும் உயிரோடெழுப்ப வருகிறார் யோவான் 5:28,29ல்'இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம் ஏனென்றால், பிரேதக்குழியிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும்.

அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி, எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்'' என்றுகூறுகிறது

'அனைவரும்' என்று சொல்லப்படுவது நல்லோர், தீயோர் ஆகிய இரு திறத்தாரையும் குறிக்கும். இரு சாராரும் ஒரே சமயத்தில் எழுந்திருப்பார்கள் என்றும் அர்த்தமாகிறது. மேலும் அப் 24:15ல் நீதிமான்களும்,அநீதிமான்களும் ஆகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று அவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறது போல நானும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன் என்கிறார் பவுல். இவைகளைக் கவனித்துப் பார்த்தால் உயிர்த்தெழுதல் என்பது ஒருமுறை தான். அது நல்லோர்' தீயோர் அனைவருக்கும் சம்பவிக்கும் சரீர உயிர்த்தெழுதல் ஒன்று தான். ஆயிரம் ஆண்டுகள் இடைவெளியில் இரண்டு வித்தியாசமான உயிர்த்தெழுதல்கள் உண்டு என்ற கூற்று வேதாகமத்தின் போதனையை அடிப்படையாகக் கொண்டதல்ல.

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிரோடு எழுந்திருப்பார்கள் என்று கூறப்பட்டிருக்கிறதே, அது எப்படி என்று சிலர் வினவலாம். அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிற வசனத்துக்கு முன்னும் பின்னும் உள்ள வசனங்களைக் கவனியுங்கள்.'' கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை.

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள் மேல் அவர்களோடு கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். 1 தெச 4:15-18.

மேற்சொன்ன வசனங்களில் இரண்டு உயிர்தெழுதல்கள் இருக்கும் என்பதற்கான குறிப்பு எதுவுமில்லை. கிறிஸ்துவுக்குள் மரித்தோர் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கிற நாமும் கர்த்தரைச் சந்திப்பதற்காக எடுத்துக்கொள்ளப்படுவோம். அதாவது உயிரோடிருக்கிற பரிசுத்தவான்கள் இறந்துபோன பரிசுத்தவான்களுக்கு முந்தி மறுரூபமடைவதில்லை 1 கொரி 15:51, 52.

**2. அவர் உலகத்தை நியாயம் தீர்க்க வருகிறார்.**

'நீதிமான்களுக்கு வெகுமதியும், துன்மார்க்கர்களுக்கு தண்டனையும் என்னோடே கொண்டு வருகிறேன்' என்கிறார். 'இதோ சீக்கிரமாய் வருகிறேன்.' அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது. வெளி 22.12.

'நியாயத்தீர்ப்பு நாள் நியமிக்கப்பட்டாயிற்று. கிறிஸ்துவே நியாயாதிபதி' அப் 17:30-31. நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன்பு நிற்கவேண்டும் (ரோமர் 14:10-12.) தப்புவதற்கு வழியே இல்லை. வேறொருவர் மீதுபழிபோட முடியாது. ஒவ்வொருவனும் தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்கு ஒப்புவிப்பான். ஒருவன் மற்றவனுக்காகப் பதில்சொல்ல வாய்ப்பில்லை. நம்முடைய பெற்றோர்கள் எதை நம்பினார்கள், எதைச் செய்தார்கள் என்ற கேள்விக்கே இடமில்லை. போதகர்களுக்குப் பின்னாலேயோ, நண்பர்களுக்குப் பின்னாலேயோ, பிள்ளைகளுக்குப் பின்னாலேயோ மறைந்துகொள்ள முடியாது. அவனவன் என்பதைக் கவனியுங்கள்.

மேலும் நியாயத் தீர்ப்புக் காட்சியை இயேசு விவரிக்கும்போது- எல்லா நாட்டு மக்களும், நியாயாசனத்துக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். நியாயத் தீர்ப்புக்குப் பின்பு துன்மார்க்கர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் மத் 25:31-46.

**3. இறுதியாக அவர் வரும்போது இராஜ்ஜியத்தைப் பிதாவிடம் ஒப்புவிப்பார்.**

ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

அதன் பின்பு முடிவு உண்டாகும் அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரித்து தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு இராஜ்ஜியத்தை ஒப்புக்கொடுப்பார் எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும், அவர் ஆளுகைசெய்ய வேண்டியது.

பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம். சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினரே, ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது வெளியரங்கமாய் இருக்கிறது.

சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். (1 கொரி 15:22-28.)

அப்போஸ்தலனாகிய பவுல் இந்த நிருபத்தைக் கொரிந்து பட்டணத்துத் திருச்சபைக்கு எழுதும்போது கிறிஸ்து அரசாட்சி செய்துகொண்டிருக்கிறார் என்றும், கடைசிச் சத்துருவாகிய மரணம் ஜெயிக்கப்படும் வரையிலும் ஆளுவார் என்றும் சொல்லுகிறார். இயேசு கிறிஸ்து மீண்டும் வரும்போது, சாவின் பிடியிலிருந்து மரித்தவர்கள் விடுவிக்கப்படுவார்கள். அவ்விதமாகக் கடைசிச் சத்துருவாகிய மரணம் ஜெயிக்கப்படும். அதன் பிறகு சபையாகிய இராஜ்ஜியத்தைப் பிதாவினிடம் ஒப்படைப்பார். இவைகள் நடந்தேறுகிற வரையில் அவர் ஆளுகை செய்வார். தம்முடைய உண்மையுள்ள இராஜ்ஜியத்தின் பிள்ளைகளை மரணத்தின் பிடியிலிருந்து விடுவித்த பிறகு தம்முடைய இராஜ்ஜியத்தைப் பிதாவுக்கு ஒப்புக் கொடுப்பார். ஆகவே இந்த வசனப் பகுதி இயேசுகிறிஸ்து இன்று அரசாண்டுகொண்டு இருக்கிறார் என்றும் இராஜ்ஜியம் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறுகிறது. இராஜ்ஜியம் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டு இருந்தால் ஒழிய கிறிஸ்து இராஜ்ஜியத்தைப் பிதாவினிடத்தில் ஒப்புவிக்க முடியாதே.

**பின்னர் முடிவு வரும்**

இயேசு பலமுறை உலகத்தின் முடிவைப்பற்றிச் சொல்லுகிறார் (மத் 13:40, 49) இது ஒரு சவால் நிறைந்த சிந்தனை. அது உண்மையாகவே ஒரு மகத்தான நிகழ்ச்சி. நாம் தயாராக இருக்கிறோமா? அதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறோமா? ''நீங்கள் நினையாத நாழிகையில் மனுஷகுமாரன் வருவார், ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்'' என்கிறார் இயேசு. (மத் 24:44)

**விழிப்போடு ஜெபித்துக் காத்திருக்க வேண்டும்.**

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஒவ்வொருவருமே விழிப்போடு ஜெபித்துக் காத்துக் கொண்டிருக்க வேண்டும். இதை இயேசுவும் அப்போஸ்தவர்களும் அடிக்கடி வலியுறுத்தியிருக்கிறார்கள். பத்துக் கன்னிகைகளின் உவமையைக் கவனியுங்கள். மத் 25:1-12.

இங்கே கர்த்தருடைய முடிவுரையையும் அது நமக்குக் கற்பிக்கும் பாடத்தையும் பாருங்கள். உவமையைத் தொடர்ந்து மனுஷ குமாரன்

வரும் நாளையாவது, நாழிகையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் என்கிறார். (ம 25:13)

கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களையும் கவனியுங்கள்:

1. 'பரலோக இராஜ்ஜியம் பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. இவர்கள் கர்த்தருடைய சபையின் உறுப்பினர்களுக்கு ஒப்பாவார்கள், அதாவது ஜெபத்தினாலும், ஆவியினாலும் பிறந்து இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள் என்று பொருள்.

2. இரட்சிக்கப்பட்ட மக்கள் கூட விழிப்புள்ளவர்களாக இல்லாமலும் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தம் இல்லாமலும் இருப்பார்களேயானால் இரட்சிப்பை இழந்து போவார்கள்.

வேறு இடத்தில் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளுங்கள்
'அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்'.

ஒரு மனுஷன் தன் வீட்டை விட்டு புறதேசத்துக்குப் பிரயாணம் போக எத்தனிக்கும்போது தன் ஊழியக்காரருக்கு அதிகாரம் கொடுத்து அவனவனுக்குத் தன் தன் வேலையையும் நியமித்து விழித்திருக்கும்படிக்குக் காவல் காக்கிறவனுக்குக் கற்பித்தான்.

அப்படியே நீங்களும் விழித்திருங்கள். ஏனெனில் வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள்.

நீங்கள் நினையாத வேளையில் அவன் வந்து உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டு பிடியாதபடிக்கு விழித்திருங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லார்க்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்' என்றார். மாற் 13:33,37

பிரியமானவர்களே இப்பொழுது தேவனுடைய பிள்ளைளாக இருக்கிறோம். இனி எவ்விதமாய் இருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாக நாம் அவரை தரிசிப்பதனால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்- அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருப்பவன் எவனும், அவர் சுத்தமுள்ளவராயிருப்பது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொண்டிருக்கிறான். 1 யோவான் 3:2,3

சத்தியத்துக்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்கிறார் பேதுரு. (1 பேது 1:22.) பாவங்களினின்று விடுபடவேண்டுமென்றால் ஒருவன் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து மனம் திரும்பி, அறிக்கையிட்டு,

கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது அப் 2:38; கலா 3:27; மத் 10:32.

இதுவரை நீங்கள் கர்த்தருடைய சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாமல் இருந்தால், அவர் வரும்போது நீங்கள் ஆயத்தமுள்ளவர்களாக இருக்கும்படி இப்போதே அதைச் செய்யுங்கள்.

ஏற்கனவே நீங்கள் அவ்வாறு ஞானஸ்நானம் பெற்றிருந்தால் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருங்கள் (ரோமர் 2:7.)

ஆதிக் கிறிஸ்தவர்கள் நடந்து கொண்டதைப் போல அப்போஸ்தலர் உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுவதிலும் உறுதியாய்த் தரித்திருங்கள் (அப் 2:42.) ஆதிக் கிறிஸ்தவர்களின் ஆ ர ா த னை யி ல் அப்பம் பிட்குதல் (கர்த்தருடைய பந்தி) ஒரு பகுதியாக இருந்தது (அப் 20:7) க ர் த் த ர் அவர்களை ஆசீர்வதித்திருப்பதற்கேற்ப அவர்கள் ஆண்டவருக்குக் காணிக்கை செலுத்தினார்கள். (1 கொரா 16:2.)

ஆதிக் கிறிஸ்தவர்கள் சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக் கொண்டு இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி ஆராதித்தார்கள். எபே5:19; கொலே 3:16; 1கொரி 14:15.

நாம் தேவனுடைய க ட் ட ளை க ள் அனைத்துக்கும் கீழ்ப்படிந்து முடிவுபரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருந்து கிறிஸ்து மீண்டும் வரும்போது நி த் தி ய த் தை அவரோடு கழிப்பதற்கு ஆயத்தமாக இருப்போமாக.

A. G. ஹோப்ஸ்

சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற் போகாது. தன் உதடுகளை அடக்குகிறவனே புத்திமான். நீதி 10:19

யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவன். யாக் 1:19

காரியத்தைக் கேட்குமுன் உத்தரவு சொல்லுகிறவனுக்கு அது புத்தியீனமும் வெட்கமாயிருக்கும் நீதி 18:13.

தன் வார்த்தைகளில் பதறுகிற மனுஷனைக் கண்டாயானால் அவனை நம்புவதைப் பார்க்கிலும் மூடனை நம்பலாம் நீதி 29:20.

அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான்; விவேகி குளிர்ந்த மனமுள்ளவன் நீதி 17:27.

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9:00to 9:15 P. M'
Fridays-7:45 to 8:00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker: Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9:00 to 9:15 P. M.
Thursdays-9:00to 9:15 P. M.
Fridays-9:00 to 9:15 P. M.
Sundays-12:45 to 1:00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2:30 to 2:45 P. M.
Tuesdays-2:30 to 2:45 P. M.
Thursdays-2:30 to 2:45 P. M.
Fridays-2:30 to 2:45 P. M.
Saturdays-2:30 to 2:45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker: P. R. Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5:30 to 5:45 P. M.
Thursdays-6:45 to 7:00 P. M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker: P. K. Varghese
All corespondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala.)
Tuesdays,3:45 to 4:00 P. M.
Fridays-3:45 to 4:00 P. M.

**KANNADA**—The Voice of Truth—Speaker: Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sunday: 1-45 2-00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

# நற்செய்திப் பேருரைகள்

இடம்: 19, ஹார்வி நகர் (கிறிஸ்துவின் சபை கூடும் இடம்)
மெயின்ரோடு, அரசரடி, மதுரை-625 016.

காலம்: 20, 21, 22-10-1989. (வெள்ளி, சனி, ஞாயிறு)

நேரம்: பிரதி மாலை 6-30 மணி

செய்தி கொடுப்பவர்: சகோ. E. Z. செல்வநாயகம்
(நற்செய்தி உரைஞர் & ஆசிரியர் - திருமறை ஆசான்)

சிறப்புப் பாடல்கள்: சகோ. P C. பிலமோன் ராஜா

அனுமதி இலவசம்! அனைவரும் வாரீர்!!

P. C. பிலமோன் ராஜா,
ஊழியர் மற்றும் கிறிஸ்துவின் சபையார்
அரசரடி, மதுரை-625016. (மதுரை தெற்கு)

பி.கு. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் ஆயிர வருட அரசாட்சி பற்றி உரை நிகழ்த்தப்படும்.

Published by Church of chirst and Printed bySri. vela E V. Rajamanickam at vela Printers, Erode-638 001. Phone: 74878
Editor. E. Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.
(or)
Post Box No: 58. ERODE-638 001.